# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **236/ந/2017**

ஆணை எண். **8/2018**

நாள் : **09/01/2018**

திரு ப. அண்ணாமலை,
காஞ்சிபுரம்.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
காஞ்சிபுரம்.

– **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், சோளிங்கர், ஜம்போ குளம், பெரிய சாலை மேற்கு, 221– எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ப. அண்ணாமலை அவர்களின் 05.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2017 அன்று பெறப்பட்டு 236/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், சோளிங்கர், ஜம்போ குளம், பெரிய சாலை மேற்கு, 221– எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ப. அண்ணாமலை என்பவர் நகராட்சியில் குழாய் ஆய்வாளராகப் பணியாற்றிய தனக்கு 02.11.2016 அன்று ஐந்தாவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகை ரூபாய் 16,797/– மட்டும் வழங்கப்பட்டுள்ளதென்றும் அத்தொகைக்கு 07.06.2006 முதல் 31.10.2016 முடிய உள்ள காலத்திற்கு வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து காஞ்சிபுரம் பெருநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பணிபுரியும் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அனைத்து பணியாளர்களின் சேமநலநிதிக்குரிய வட்டித் தொகையினை பிரேரணை முன்மொழிவு 2007–2008 முதல் 2015 –2016 வரையிலான ஆண்டுகளுக்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவ்வியக்குநரகத்தின் ஒப்புதல் பெற்றவுடன் மனுதாரருக்குரிய சேமநலநிதி வட்டித் தொகை வழங்கப்படும் என பலமுறை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். எனினும், மனுதாரரின்

கோரிக்கை சம்பந்தமாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகத்தை தொடர்பு கொண்டு, ஒப்புதல் பெற்று மனுதாரருக்க வழங்கப்படவேண்டிய வட்டித் தொகையினை உடன் விடுவிக்குமாறு காஞ்சிபுரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **ஜனவரி** திங்கள், **9–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   காஞ்சிபுரம் பெருநகராட்சி,
   காஞ்சிபுரம்.

2. திரு. ப. அண்ணாமலை,
   221, பெரிய தெரு மேற்கு,
   ஜம்போகுளம் கிராமம் மற்றும் அஞ்சல்,
   (வழி) சோளிங்கர் – 631 102,
   வேலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி